உ

கடவுள் துணை.

# செந்தமிழ்

தொகுதி-கக.] பரீதாபி ஹூ மார்கழிமீ [பகுதி-உ.

## வேள் - பேகன்.

இவன், வேளிர்தலைவருள் ஒருவனான ஆவியின் குடியிலுதித்த பெருந்தகையாவன்; இவனை வையாவிக்கோப் பெரும்பேகன் எனவும் வழங்குவர். கடைச்சங்கநாளில் விளங்கிய கடையெழுவள்ளல்களில் இவனும் ஒருவன் என்பது "முரசுகடிப்பிகுப்பவும்" என்னும் புறப் பாட்டாலும் (கருஅ) சிறுபாணாற்றுப் படையில் அச- முதல் கஉஉ- வரையுள்ள அடிகளாலும் விளங்கும். இவனது வரையா வள்ளன் மையைப் பரணர் என்னும் பழையபுலவர் புகழுமிடத்து—"குளத்தி லும் வயலிலும் களர்நிலத்தும் ஒப்பப்பெய்யும் வரையறையில்லாத மாரிபோலப், பேகனும் கொடையிடத்துத் தான் அறியாமைப் படுவ தல்லது, பிறர் படைவந்து பொரும்போது அப்படையிடத்துத் தான் அறியாமைப்படான்"—என்ற கருத்துப்பட,

"அறுகுளத் துகுத்தும் அகல்வயற் பொழிந்தும்
உறுமிடத் துதவா துவர்நில மூட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்காற் பேகன்
கொடைமடம் படுத லல்லது
படைமடம் படாஅன்பிறர் படைமயக் குறினே"

என அவனது கொடைமடத்தைச் சிறப்பிப்பர். இவனது கொடை மடத்தைப்பற்றிய மற்றொரு செய்தியுமுண்டு; இவ்வள்ளல் ஒருகால் மலைவழியே செல்லும்போது மயிலொன்று தன் சிறகை விரித்து ஆடு

வது கண்டு, 'அது குளிருக்காற்றாது வருந்தி நடுங்குகின்றதுபோ லும்' என்று கருதித் தான் மேற்போர்த்திருந்த உயர்ந்த படாத்தை அதன்மேற் சார்த்திச் சென்றான்—என்பதாம். இச்செய்தி—

"உடாஅ போரா ஆகுத லறிந்தும்
படாஅமஞ் ஞைக்கீத்த எங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேக!"

.எனப் பரணரும் (புறம் - ௧௪௧)

"மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅ மீத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக!"

என வன்பரணரும் (ஷை - ௧௪௫)

"வானம் வாய்த்த வளமலைக் கவாற்
கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய
அருந்திற லணங்கி னாவியர் பெருமகன்
பெருங்கன் னாடன் பேகன்" (சிறுபாண் - அடி. அ௪ - எ)

என இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனாரும் கூறுதல் காண்க. "முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும் - எல்லை நீர் ஞாலத் திசைவிளங்கத் - தொல்லை--இரவாம லீந்த இறைவர்போ லீயுங் - கர வாம லீகை கடன்" என்புழி ஐயனாரிதனாரும் இச்செய்தியைக் குறித் தார். இவ்வழகிய வரலாற்றால், வேறு பயன் கருதாது உயிர்களி டத்துப் பேகனுக்கு இயல்பாகவேயிருந்த பெருங்கருணைத்திறம் விளங்கும். "எத்துணை யாயினும் ஈத்தல் நன்றெண - மறுமைநோக் கின்றோ அன்றேபிறர், வறுமை நோக்கின் றவன்கை வண்மையே" என, இவ்வள்ளலை நோக்கிப் பரணர் என்ற புலவர்பெருமான் புகழ்ந் திருத்தலும் ஈண்டு நோக்கற்பாலது.

இங்ஙனம் பேகனென்னும் பெருந்தகை வள்ளலுக்கு உரிய மனைவியானவள், கண்ணகியென்ற கற்புடையரசியாவள். இம்மனை யாளுடன் இல்லறம் புரிந்துவந்த பேகனது நல்வாழ்க்கையில் திடீ

றென்று மாறுதல் ஒன்று நிகழ்வதாயிற்று. அந்தோ! கண்ணகி என்னும் பெயர்வாய்ந்த மகளிர்க்கெல்லாம்—தங்கணவர் பரத்தையர்நலம் நுகர்ந்து மகிழ்ந்திருக்கத்—தாம் தனித்திருந்து அவர்பிரிவாற்றாது வருந்துதலே இயல்பாயிற்றுப் போலும். கோவலனுடைய கற்புடை மனைவியாகிய கண்ணகி என்பாள், இளமையில் தன்கணவன் பரத்தை வயத்தனாய் நின்ற துயரமிக்கு வருந்தியதுபோலவே, இக்கண்ணகிக்கும், தன் கணவனாகிய பேகன் பொதுமகளொருத்தி மோகத்தில் வீழ்ந்தமையால் ஆற்றாமை பெரிதாயிற்று. அருங்குணமும் பெருங் கொடையுமுடைய இப்பெருந்தகை, இங்ஙனம் பொதுமகள் வலைப்பட்டு, தன்னரிய மனைவியைப்பற்றிய சிந்தையேயில்லாது உறைந்தது, விதியின் வலிபோலும். பேகனுக்கும் கண்ணகிக்கும் நேர்ந்த இப்பிரிவுபற்றிய செய்தியானது அவர்களது இல்வாழ்க்கைக் காலத்தே பெரிதும் உபசரிக்கப் பெற்றுப் பெரும்பயனடைந்த புலவர் பெருமக்களாகிய கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார் என்ற சான்றோர்கட்கு எட்டியதும், அப்புலவர்கள் முன் போலக் கண்ணகியும் பேகனும் சேர்ந்துவாழ முயல்வாராயினர். இவர்கள் பேகனையடைந்து, அவன் மனைவி கண்ணகியின் வாழ்க்கையில் இரக்கந்தோன்றக் கூறும் மாட்சி, பெரிதும் வியக்கற்பாலது. இப்புலவரிற் கபிலர் என்ற புலவர்பெருமான் பேகனிடஞ் சென்று அவனை நோக்கி—"சிறந்த மலைநாடனே! போர்வன்மையும் கொடைத் திறமுமுடைய பேக! நேற்று வழிநடந்து வருந்திய என் சுற்றம் பசித்ததால், உயர்ந்த மலையிடத்துள்ள சிறிய ஊரில் உன்வாயிற் கண்ணே வந்து நின்னையும் நின்மலையையும் வாழ்த்தி யான் பாடிநின்றேனாக, அப்போது துக்கத்துடன் சொரிந்த கண்ணீரையுடையவளாய் அக்கண்ணீர் முலையிடத்தை நனைக்கும்படி பொருமி, வேய்ங் குழல் இரங்கியொலிப்பதுபோல, ஒருத்தி அழுதாள்; இரங்கத்தக்க அன்னாள், யார்கொல்லோ, சொல்க" என்று, அவ்வள்ளலுங் கேட்டிரங்கும்படி கூறினர். இவ்வாறே பரணரும்,* அவ்வள்ளலைக்கண்டு,

* இவர் பாடியது "அருளாயாகலோ கொடிதே" (புறம்-கசச) என்பது. "இது, கண்ணகி காரணமாக வையாவிக்கோப்பெரும்பேகனைப் பரணர் பாடிய கைக்கிளைவகைப் பாடாண்பாட்டு" என்பர் நச்சினார்க்கினியர் (தொல். பொருளதி. பக் - உகo.)

"நேற்றுமாலையில் நின்மழைமிகுந்த காட்டை யாங்கள்பாடிக்கொண்டு வந்தேமாக, நீலமலர்போன்ற கண்களினின்றும் கலங்கி வீழ்ந்த நீர்த்துளிகள், பூணையுடைய தன்மார்பகத்தை நனைக்கும்படி வருந்தி நின்ற ஒருத்தி எம்முன் வந்து தோன்ற, அவளைநோக்கி யாங்கள், 'இளையோய்! எங்களுடைய நட்பைவிரும்பும் தலைவனாகிய பேகனுக்கு நீ உறவினையோ' என்று வணங்கிக் கேட்டபோது, அவள், காந்தண் மொட்டுப்போன்ற தன் விரலாலே தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு 'நாங்கள் அவனுடைய உறவினர் அல்லேம்; கேளுங்கள், விளங்கிய புகழையுடைய பேகன் எம்மை யொக்கும் ஒருத்தியுடைய அழகைக் காதலித்துத் தன்தேரில் இந்நல்லூரின்கண் அடிக்கடி வருவன் என்று சொல்லுவர்' என்று கூறினள்; இஃது என்னே! தலைவ! நீ அவட்கு இரங்கி அருள்பண்ணுதிருத்தல் மிகக்கொடியது" "மயிலுக்கிரங்கிப் போர்வையளித்த பெருங்கருணையுடைய பேக! யாம் இப்போது பசித்து நின்பால் வரவில்லை; எம்மாற் றுங்கப்படவேண்டிய சுற்றமும் இப்போது இல்லை; பேரருளாள! நீ அறநெறியில் ஒழுக வேண்டும் என்பதே யாம் இரக்கும் பரிசில்: ஆதலால் நீ உன் தேரில் ஏறிச்சென்று, பார்ப்பதற்கரிய துக்கத்தைக் கொண்ட உன் கற்புடை மனைவியின் சிந்தாகுலத்தைத் தீர்ப்பாயாக" என்றனர். இவ்வாறே, தாம் பரிசில் வேண்டி வரவில்லை யென்றும், நீ அவளைச்சென்று சேர்தலே யாம் வேண்டுவதென்றும்— அரிசில் கிழாரும், பெருங்குன்றூர் கிழாரும் பேகனைக்கண்டு பாடினர்.* இங்ஙனம், அக்காலத்தே தமிழ் நாட்டுப் பெருமக்களாய் விளங்கிய புலவர் வேண்டுகோளுக்குப் பேகன் இன்னது செய்தான் என்பது தெரிந்திலதேனும், வேண்டியோர்க்கு வேண்டியாங்களிக்கும் பெருவள்ளலாகிய அவன், இத்தகைய பெருமக்கள் நெடுந்தூரத்திலிருந்து வந்து தன்பால்வேண்டிய விருப்பத்தை நிறைவேற்றுதிரான் என்றே நம்பலாம்.

இனி இவ்வேள் - பேகனைப்பாடிய அரிசில்கிழார், வேளாவிக் கோமான் பதுமனுக்கு பகள்வயிற்றுப் பெயரனாகிய, தகடூர் எறிந்த பெருஞ்சேரவிரும்பொறையைப் பதிற்றுப்பத்து எட்டாம்பத்தாற்

---

* இப்புலவர்கள் பாடல்களைப் புறநானூற்றில் கசரு - முதல் கசஎ - வரையுள்ள பாடல்களால் உணர்க.

புகழ்ந்துள்ளார். எனவே, வேளாவிக்கோவின் வழியினனாகிய பேகனும், அவ்வாவிக்கோவின் மகள் மகனாகிய பெருஞ்சேரல்இரும்பொறையும் ஒருகாலத்தவராதல் பெறப்படும். ஒருகால், பேகன், வேளாவிக்கோமான் பதுமனுக்கு மகனாகவேனும் அன்றி மகன்மகனாகவேனும் இருத்தலும் கூடும்.வையாவிக்கோப் பெரும்பேகன் என்று இவ்வள்ளல் வழங்கப்படுதலால், இவனூர் வையாவிபுரியாகிய ஆவிநன்குடி என்பது தெரிகிறது. இவ்வாவிநன்குடிக்குச் 'சித்தன் வாழ்வு' என்பதும் ஒரு பழம்பெயராம். இதனை, "நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன் வாழ் - வில்லந் தொறுமூன் றெரியுடைத்து - நல்லரவப் - பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டியநின் - னாட்டுடைத்து நல்ல தமிழ்" என்னும் ஔவைவாக்கானும் அறிக*. இப்பாட்டாற் சித்தன் வாழ்வாகிய ஆவிநன்குடியில், சங்கநாளில் அந்தணர் மிகுந்திருந்தமை வெளியாம். சித்தன்வாழ்வு என்பது பழநியாண்டவர், கோயில் கொண்டமைபற்றி வந்தபெயர்: "சித்தன் - பிள்ளையாருக்குத் திருநாமம்" என்பர் நச்சினார்க்கினியரும்.

மு. இராகவையங்கார்.

---

உ

# வினைப்பகுதி வேறுபடுகை.

## மடி, சீ, விடு.

இகரவீற்றுப் பகுதிகளுள்ளே சில பொருணோக்கியும், சில பிறவினை நோக்கியும் விகுதிகள் இரட்டலாலே தாமும் வேறுபாடு புலப்படுத்தி நிற்கும். பொருணோக்கி இரட்டுவன ; பரி, அரி, படி, எறி, துணி,வழி முதலியன.இவற்றினின்று பரிதல், பரித்தல்,அரிதல், அரித்தல்,படிதல், படித்தல், எறிதல், எறித்தல், துணிதல், துணித்தல், வழிதல், வழித்தல், முதலிய தொழிற்பெயர்களும், பரிந்து, பரித்து, பரிய, பரிக்க, பரிந்த, பரித்த முதலிய எச்சங்களும், பரிந்தான், பரித்

---

* திருமுருகாற்றுப்படையுரை ; பக்-உள் ; ஆவிநன்குடிக்குப் போதினி என்பது ஒரு பழம்பெயராம். (அகம்-க) இஃது இக்காலத்துப் பழனி என மருவியது. (செந்தமிழ். தொகுதி-உ. பகுதி-க.)

தான் முதலிய முற்றுக்களும் தோன்றும். இங்கே விகுதியின் வழி யிரட்டலாற் பகுதிப்பொருள் வேறுயிற்று. பரிதல் - அறுதல், வருந் தல். பரித்தல் - தாங்குதல். எறித்தல் - ஒளிவிடல். துணித்தல் - வெட்டல். வழித்தல் - மெழுகல். " மங்கல வெள்ளை வழித்து " (தணிகை.)

பிறவினை நோக்கி இரட்டுவன தெளி, பிரி, நெரி, கவி முதலி யன; இவை தன் வினையிலே தெளிதல், பிரிதல், நெரிதல், கவிதல் தெளிந்து, தெளிய முதலியனவாயும், பிறவினையிலே தெளித்தல், பிரித்தல், நெரித்தல், கவித்தல், தெளித்து, தெளிக்க முதலிய வாயும் வரும்.

வடமொழியிலுள்ள ஹ்ரு, (ஹர-தாங்குதல்) என்னும் பகுதி ஹ்ரு (ஹர-அழித்தல்) என்பதனை அரி என்பதும், பட.-(படித்தல்) என்பதனைப் படி என்பதும் க்ருண் - (வெட்டு) என்பதனைத் துணி என்பதும், மதி - (கலங்குதல்) என்பதனை மடி என்பதும், பண - (துதித்தல்) என்பதனைப் பணி என்பதும், ஹட - (நோப்படுத்தல்) என்பதனை அடி என்பதும், சல - (நடுங்கல்) என்பதனைச் சலி என் பதும் பெரும்பாலும் ஒத்திருத்தல் அறிதற்பாலது.

பரி, அழி முதலிய சில பகுதிகள் செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சத்திலே பரீஇ. அழீஇ முதலியனவாயும் வரும். இவை பிறவினையாயுங் கொள்ளப்படும். "அறனழீஇ யல்லவைசெய்தலின்" (வள்.)

இவ் வீறுகளுள்ளே சில அல் என்னும் விகுதிபெற்றுப் பெய ராகும். அவை அரியல், நெரியல், ஒலியல், துணியல் முதலியன. அரியல் - மது. " அரியலார்ந்தவனந்தருளத்தினன் " (தணிகை.) நெரியல் - மிளகு. "நெரியற் புணர்ப் பொறை தாங்கிய" (பெரும்பா.) ஒலியல் - யாறு. "அவ்வொலியற் கொப்பாகுவ தோவுவராழியதே" (கந்தபு.) துணியல் - துண்டம். "கொழுமீன் குறைஇய துடிக்கட் டுணியல்." (மதுரை.)

சில பு என்னும் விகுதிபெற்றுப் பெயராகும். அவை பொழிப்பு, கவிப்பு, குறிப்பு, பொடிப்பு முதலியன. பொழிப்பு - பொலிவுடையது. லகரம் ழகரமாயிற்று. "பொழிந்தெழுகாதல்" என்னும் இராமாயணத்தையும் நோக்குக. பொழிந்து - பொலிந்து. கவிப்பு - குடை. குறிப்பு - கருத்து. பொடிப்பு - புளகம்.

சில சை என்னும் விகுதிபெற்றுப் பெயராகும். அவை வரிசை, பொலிசை, பரிசை முதலியன. வரிசை - பட்டம். "வரிசையாலுயர நேகமண்டலமகீபர்." (பாரத.) பொலிசை - இலாபம். "பெண் பெற்ற பொலிசை பெற்றார்" (சிந்.) பரிசை - தாங்குவது.

ஈகாரவீற்றுப் பகுதிகளுள்ளே சீ என்பது வெறுத்தல், என்னும் பொருளிலே ரகரம் விரியப்பெற்றுச் சீர்த்தல், முதலியனவாய் வரும். "தூர்த்த தொரு காலைதனிற் சுந்தரி பொருளாய்ச், சீர்த் திடலும்" (கந்தபு.) சீத்தை, சீக்கு முதலியன சீ என்பதினின்று தோன்றிய பெயர்கள். சீத்தை=கீழ்மகன். சீக்கு=தூரால்.

விடு, அடு, இடு, கொடு முதலிய பகுதிகள் சில இறந்தகாலத்திலே விட்டு, அட்டு, இட்டு முதலியன வாய் வலியிரட்டிவரும். உடு, எடு, தடு முதலிய சில இரட்டா. அடு என்பது சமீபித்தற்பொருளிலே இரட்டாது அடுத்து, அடுக்க, அடுத்த, அடுத்தான் முதலியனவாய் வரும்.

தகு, மிகு, அறு, உறு, இறு முதலிய பகுதிகள் தகவு, மிகவு, அறவு, உறவு, இறவு முதலியனவாய் நின்று பெயராகும். தகவு - நடுநிலைமை, மிகவு - மேம்பாடு. அறவு - அற்றம். உறவு - சுற்றம். இறவு - மரணம்.

தகு, நகு, படு, பகு முதலிய சில பகுதிகள் அல், ஐ முதலிய விகுதிகள் பெற்று தகல், தகை, நகல், நகை, படல், படை, பகல், பகை முதலியன வாய்ப் பெயராகும்.

வடமொழியிலுள்ள கூடு - கிட்டுதல், ஊடு - போதல், விழ - பிரித்தல், தம - போதல், தவி - வருந்துதல். தவ - அறைதல்.

என்னும் முதனிலைகளை அடு, இடு, விடு, தகு, தபு, தடு என்னும் முதனிலைகள் சிறுபான்மையில் ஒக்கின்றன.

உழு, எழு, முழு முதலிய சில பகுதிகள் உழால், எழால், முழால், தழால், முதலியனவாய் வந்து தொழிற் பெயராயும் பெயராயும் நிற்கும்.

தணிகைப்புராணம்.

உழாலிற்பொலிவண்டிவர்பூந்தொடைநான்றுளிர்பந்தர்
எழாலிற்பொலிமெல்லிசையுங்குரலுமெறிசெங்கை
முழாலிற்பொலிவண்முழவும்பாதமுறையோடுங்
தழாலிற்பொலிநாடகவெள்ளமிழ்துந்தழைவுற்ற.

உழால் - உழுதல். எழால் - எழுதல், யாழினிசை. முழால் - தழுவுதல். தழால் - தழுவுதல். இவை அளபெடையோடு வருதலுமுண்டு. மேலும் இரு, வழுவு, கெழு, தழுவு முதலிய இரீஇ, வழீஇ, கெழீஇ, தழீஇ முதலியனவாய் வந்து வினையெச்சமாதலும், இரீஇய, வழீஇய, கெழீஇய, தழீஇய முதலியனவாய் வந்து பெயரெச்சமாதலும், இரீஇயினார் முதலியனவாய் வந்து வினைமுற்றாதலுமுள. இரீஇ முதலியன சில விடத்திலே தன்வினையாயும், சிலவிடத்திலே பிறவினையாயுங் கொள்ளப்படும்.

சிறுபஞ்சமூலம்.

தொழீஇ யடவுண்ணார் தோழரிற் றுஞ்சார்
வழீஇய பிறர்பொருளை வெளவார்—கெழீஇக்
கலந்தபிற் கீழ்காணார் காணாய் மடவாய்
புலந்தபிற் போற்றார் புலை.

தொழீஇ - தொழுதுநிற்கும் ஏவன்மகடூஉ. வழீஇய - வழுவிய. கெழீஇ - கெழுமி. கெழுவல் - தழுவல்.

மருவு, தழுவு, ஒருவு, வெருவு முதலியன மரூஉ, தழூஉ, ஒரூஉ, வெரூஉ முதலியனவாய்வந்து பெயராதலும் உள. மரூஉ - மருவிய மொழி. தழூஉ - குரவைக் கூத்து. ஒரூஉ - ஒருவிவரும் எதுகை. வெரூஉ - அச்சம். பிற பின்.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

# ஔவையாரது நீதிநூல்கள்

(கஎ-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

(41) "ஔதும்பராணி புஷ்பாணி ஶ்வேதவர்ணம் ச வாயஸம் |
மத்ஸ்யபாதம் ஜலே பஶ்யேந் ந நாரீஹ்ருதயஸ்திதம்" ||

இதன் பொருள்:—அத்திப்பூக்களையும், வெள்ளைக்காக்கையையும், தண்ணீரில் மீன்காலையும் காணினும் காணலாம்; பெண்களின் உள்ளக்கருத்தை அறிதல் ஆகாது.

"அத்திமலரு மருங் காக்கை வெண்ணிறமுங்
கத்துபுனன் மீன்பதமுங் கண்டாலும்—பித்தரே
கானூர் தெரியற் கடவுளருங் காண்பரோ
மானூர் விழியார் மனம்."

நீதிவெண்பா 55.

(42) "ந யத்நகோடிஶதேநாபி துர்ஜந: ஸஜ்ஜநோ பவேத் |
கிம் உத்துக்தோபி கஸ்தூர்யா ஸம்யுக்தோ யாதி ஸௌரபம்" ||

இதன் பொருள்:—அநேக கோடி முயற்சிகள் செய்யினும் துட்டனைச் சிட்டனாகச் செய்தல் முடியாது. கஸ்தூரியோடு கலந்தாலும் உள்ளி நறுமணங் கமழ்தலுண்டோ?

"அவ்விய நெஞ்சத் தறிவிலாத் துர்ச்சனரைச்
செவ்விய ராக்குஞ் செயலுண்டோ—திவ்வியநற்
கந்தம் பலவுங் கலந்தாலு முள்ளியது
கந்தங் கெடுமோ கரை."

நீதி வெண்பா 21.

(43) "ஶகடம் பஞ்சஹஸ்தேஷு தஶஹஸ்தேஷு வாஜிநம் |
கஜம் ஹஸ்தஸஹஸ்ரேஷு துஷ்டம் தூரேண வர்ஜயேத்" ||

இதன் பொருள்:—வண்டியைக் காணின் அதற்கு ஐந்துமுழமும், குதிரையைக் காணின் அதற்குப் பத்துமுழமும், யானையைக் காணின் அதற்கு ஆயிரமுழமும் விலகிப்போதல் வேண்டும். துட்டரைக் கண்டாற் கண்ணிற்குத் தெரியாத தூரத்து விலகவேண்டும்.

"கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணிற் றெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி."

நீதி வெண்பா 20.

(44) "𑌦𑍁𑌰𑍍𑌜𑌨𑌃 𑌪𑌰𑌿𑌹𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑍋𑌽𑌪𑌿 𑌸𑌨𑍍 ।
𑌮𑌣𑌿𑌨𑌾 𑌭𑍂𑌷𑌿𑌤𑌃 𑌸𑌰𑍍𑌪𑌃 𑌕𑌿𑌮𑌸𑍌 𑌨 𑌭𑌯𑌂𑌕𑌰𑌃 " ॥

இதன் பொருள்:—துஷ்டகுணமுடைய தீயோன் கல்வியிற் சிறந்தோனாகவிருப்பினும், அவனோடு சேராதொழிக. ஒளிமிகுந்த மாணிக்கத்தையுடைய பாம்பே யாயினும், அது கொடிய பாம்பேயன்றோ?

"தீயவர்பாற் கல்வி சிறந்தாலு மற்றவரைத்
தூயவரென் றெண்ணியே துன்னற்க—சேயிழையே
தண்ணொளிய மாணிக்கஞ் சர்ப்பந் தரித்தாலு
நண்ணுவரோ மற்றதனை நாடு."

நீதி வெண்பா 71.

(45) "𑌵𑍃𑌶𑍍𑌚𑌿𑌕𑌸𑍍𑌯 𑌵𑌿𑌷𑌂 𑌪𑍁𑌚𑍍𑌛𑌂 𑌮𑌕𑍍𑌷𑌿𑌕𑌸𑍍𑌯 𑌶𑌿𑌰𑍋 𑌵𑌿𑌷𑌮𑍍 ।
𑌤𑌕𑍍𑌷𑌕𑌸𑍍𑌯 𑌵𑌿𑌷𑌂 𑌦𑌨𑍍𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌂 𑌦𑍁𑌰𑍍𑌜𑌨𑍇 𑌵𑌿𑌷𑌮𑍍" ॥

இதன் பொருள்:—தேளுக்கு விஷம் கொடுக்கிலும், ஈக்கு விஷம் தலையிலும், பாம்புக்கு விஷம் பல்லிலுமிருக்கும். துர்ச்சனருக்கு உடம்பு முழுவதும் விஷமேயாயிருக்கும்.

"ஈக்கு விடந்தலையி லெய்துமிருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்
கங்கமுழு தும்விடமே யாம்"

நீதி வெண்பா 18.

(46) "𑌕𑍃𑌷𑌿𑌤𑍋 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌦𑍁𑌰𑍍𑌭𑌿𑌕𑍍𑌷𑌂 𑌜𑌪𑌤𑍋 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌪𑌾𑌤𑌕𑌮𑍍।
𑌮𑍌𑌨𑍇𑌨 𑌕𑌲𑌹𑍋 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌜𑌾𑌗𑌰𑌤𑍋 𑌭𑌯𑌮𑍍॥"

இதன் பொருள்:—தக்கதொழில் (பயிர்த்தொழில்) செய்வார்க்குப் பஞ்சமில்லை; விடாது செபஞ் செயவார்க்குப் பாவமில்லை; வாய் வாளாதிருப்பார்க்குக் கலக மில்லை! நித்திரைசெய்யாது விழித்திருப் பாருக்குப் பயமில்லை.

"உற்றதொழில் செய்வோர்க் குறுபஞ்ச மில்லையாம்
பற்றுசெபத் தோர்க்கில்லை பாவங்கண்—முற்று
மவுனத் தோர்க்கில்லை வருகலகந் துஞ்சாப்
பவனத் தோர்க்கில்லை பயம்."

நீதி வெண்பா 44.

(47) "𑌕𑌾𑌸𑍋 𑌹𑌿 𑌵𑍍𑌯𑌾𑌧𑌿𑌸𑌾𑌦𑍃𑌶𑍍𑌯𑌂 𑌶𑍍𑌲𑍇𑌷𑍍𑌮𑌣𑍋 𑌦𑍁𑌰𑍍𑌜𑌨𑌸𑍍𑌯 𑌚।
𑌉𑌪𑌚𑌾𑌰𑍈𑌃 𑌕𑍋𑌪𑌮𑌾𑌯𑌾𑌤𑌿 𑌕𑌟𑍂𑌕𑍍𑌤𑍍𑌯𑍈𑌵𑍋𑌪𑌶𑌾𑌮𑍍𑌯𑌤𑌿"॥

இதன் பொருள்:—இருமலும் துர்ச்சனரு மொப்பாவார்கள். எப்படியெனில், இருமல் தித்திப்பினால் அதிகப்படும்; கசப்பினால் அடங்கும். துர்ச்சனரும் இனிய மொழிகளால் மிஞ்சுவார்கள்; கடுஞ்சொற்களால் அடங்குவார்கள்.

"துன்னு மிருமலுந் துர்ச்சனரு மொக்குமே
மன்னு மினிமையான் மாறுகிப்—பன்னுங்
கடுவுங் கடுநேர் கடுமொழியுங் கண்டாற்
கடுக வசமா கையால்."

நீதி வெண்பா. 22.

(48) "𑌅𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌾 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾 𑌨𑌷𑍍𑌟𑌾𑌃 𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌾𑌶𑍍𑌚 𑌪𑌾𑌰𑍍𑌥𑌿𑌵𑌾𑌃।
𑌸𑌲𑌜𑍍𑌜𑌾 𑌗𑌣𑌿𑌕𑌾 𑌨𑌷𑍍𑌟𑌾 𑌨𑌿𑌰𑍍𑌲𑌜𑍍𑌜𑌾𑌶𑍍𑌚 𑌕𑍁𑌲𑌾𑌙𑍍𑌗𑌨𑌾"॥

இதன் பொருள்:— கிடைத்த பொருளிலே திருப்தியடையாத வந்தணரும், கிடைத்த பொருளிலே திருப்தியடைந்த புரவலரும், நாணமுடைய வேசியரும், நாணமில்லாக் குலமகளிரும் தாழ்வடைவார்கள்.

"பெற்றமையு மென்னுப் பெரியோரும் பெற்றபொருண்
மற்றமையு மென்றே மகிழ்வேந்து—முற்றியநன்
மானமிலா வில்லாளு மானமுறு வேசியரு
மீன முறுவா ரிவர்."

நீதி வெண்பா. 14.

(49) "கோகிலாநாம் ஸ்வரோ ரூபம் பாதிவ்ரத்யஞ்ச யோஷிதாம் ।
க்ருபா ரூபஞ்ச விதுஷாம் க்ஷமா ரூபம் தபஸ்விநாம்" ॥

இதன் பொருள்:—குயில்களுக்கு அழகு இன்னேசை; பெண்களுக்கு அழகு கற்பு; கற்றோர்க்கு அழகு இரக்கம்; அருந்தவமுடையார்க்கு அழகு பொறுமை.

"அன்னமனை யாய்குயிலுக் கானவழ கின்னிசையே
கன்னன்மொழி யார்க்கழகு கற்பாமே—மன்னுகலை
கற்றோர்க் கழகு கருணையே யாசைமயக்
கற்றோர்க் கழகுபொறை யாம்."

நீதி வெண்பா. 66.

(50) "காகஃ க்ருஷ்ணஃ பிகஃ க்ருஷ்ணஃ கோ பேதஃ பிககாகயோஃ ।
வஸந்தகாலே ஸம்ப்ராப்தே காகஃ காகஃ பிகஃ பிகஃ" ॥

இதன் பொருள்:—காக்கை கறுநிறமுடையது; குயிலும் கறுநிறமுடையது; காக்கைக்கும் குயிலுக்கும் பேதம் யாது? இளவேனிற் காலம் வந்துறுங்காற் காக்கை காக்கையே, குயில் குயிலேயாம்.

"வாக்குநயத் தாலன்றிக் கற்றவரை மற்றவரை
யாக்கைநயத் தாலறிய லாகாதே—காக்கையொடு
நீலச் சிறுகுயிலை நீடிசையா லன்றியே
கோலத் தறிவரோ கூறு."

நீதி வெண்பா. 87.

(51.) உபத்யயாம் யத்ர ரக்ஷேத் ஸதா ஸாவதஃ காதஃ ।
ஸாதெ உபமதா ஶக்யஃ ஸஞ்சிதாயோபி நஶ்யதி" ॥

இதன் பொருள்:— ஆபத்துவரின் அதனை நீக்கிக்கொள்ளும் பொருட்டுப் பொருளைக் காப்பாற்றல் வேண்டும். இலக்ஷ்மீகடாட்சமுடைய சீமான்களுக்கு ஆபத்தேன் வரும்? (என்றால்), இலக்ஷ்மீகடாக்ஷம் குறைந்து அத்திருமகள் நீங்கினால் வருமன்றோ? (அவ்வாறாயின்) கூட்டிவைத்த பொருளும் அடியோ டழிந்துபோமன்றோ?

"ஆபத்து வந்தா லரும்பொருடான் வேண்டுமே
யாபத்தேன் பூமா தருகிருந்தா—லாபத்து
வந்தா லவளு மருவாம லெப்பொருளு
மந்தோ வுடன்போ மறி."

நீதி வெண்பா. 45.

(தொடரும்.)

டி. எஸ். குப்புஸ்வாமி சாஸ்திரி.

---

உ

# புட்பபந்தம்.

(உச-ஆம் பக்கத்தொடர்ச்சி)

சுக்கிரன், புதன், சந்திரன் இவர்களுக்குமுன் அங்காரகன் நடந்தால் அனாவிருஷ்டி யுண்டென்றும், புதன், சந்திரன், அங்காரகன் இவர்களுக்குமுன் சுக்கிரன் நடந்தால் மழையுண்டென்றும், சந்திரன், சுக்கிரன், அங்காரகன் இவர்களுக்குமுன் புதன் நடந்தால் மழையில்லையென்றும், அங்காரகன், புதன், சுக்கிரன் இவர்களுக்கு முன் சந்திரன் நடந்தால் மழையுண்டென்று மறிக.

குரு அதிசாரனாயும் சனி வக்கிரனாயுமிருக்குங் காலத்திற் பிரஜைகளுக்குத் துர்ப்பிக்ஷத்தினால் ஆஹாராகாரமுண்டு.

குருவிற்கு ஏழிற் சுக்கிரனிருந்தாலும் அல்லது சூரியனுக்கு ஏழிற் குரு இருந்தாலும் அனாவிருஷ்டி யுண்டென்ப.

ஜலராசியிற் சந்திரனிருந்து அவற்கு 5, 7, 9-ற் சனியுங் குஜனும் சேர்ந்திருந்தாலும் தனித்திருந்தாலும் நல்லமழையுண்டு.

சுக்கிரன், குஜன், புதன், சந்திரன் இவர்கள் ஜலராசிகளிலிருந்தால் அதிவிருஷ்டி யுண்டென மநு சொல்வர்.

ஒரு வருஷத்திற் குரு மூன்று இராசிகளிற் சஞ்சரித்தால் ஏழு கோடி பிரேதங்கள் விழும்.

கார்த்திகை, மகம், அவிட்டம், அநுடம் இவைகளுக்குச் சமுத்திர நக்ஷத்திரங்களென்று பெயர்.

திருவாதிரை, புனர்பூசம், ஹஸ்தம், சித்திரை, பூராடம், உத்திராடம், உத்திரட்டாதி, இரேவதி இவைகளைப் பர்வதநக்ஷத்திரமென்ப.

அஸ்வதி, மிருகசிரம், பூசம், உத்திரம், ஸ்வாதி, மூலம், திருவோணம், பூரட்டாதி இவைகளைக் குக்ஷி நக்ஷத்திரங்களென்ப.

உரோகணி, ஆயில்யம், பூரம், விசாகம், கேட்டை, அபிஜித்து, சதயம், பரணி இவைகளைத் தீரநக்ஷத்திரங்கள் அல்லது நதி நக்ஷத்திரங்கள் என்ப.

பருவத நக்ஷத்திரங்களில் அநாவிருஷ்டியும், குக்ஷி நக்ஷத்திரங்களில் அதிவிருஷ்டியும், தீரநக்ஷத்திரங்களிற் கண்ட விருஷ்டியும், சமுத்திர நக்ஷத்திரத்திற் சுவிருஷ்டியுமுண்டு.

சுக்கிரன், ஸ்வாதி, விசாகம், அனுஷம் இம்மூன்று நக்ஷத்திரங்களிற் கிழக்கிலும், மகமுதல் ஐந்து நக்ஷத்திரங்கள் வரை மேற்கிலும் பிரகாசித்துக்கொண்டிருந்தால் மழையில்லையென்றும், ஸ்வாதிமுதல் மூன்று நக்ஷத்திரங்கள் வரை மேற்கிலும் மகமுதல் ஐந்து நக்ஷத்திரங்கள் வரை கிழக்கிலும் பிரகாசித்துக்கொண்டிருந்தால் மழையுண்டென்று மறிக.

ஸ்வாதித்திரயத்தில் மேற்கிலும் மகபஞ்சகத்திற் கிழக்கிலும் சுக்கிரன் பிரகாசித்துக்கொண்டிருக்கும்போது அவற்கு வக்கிரமுண்டானால் மழையில்லை.

ஆயில்யம், விசாகம், பூரம், பூராடம், பூரட்டாதி இந்நாட்களிற் குஜசஞ்சார காலமாயின் நல்ல மழையுண்டு.

ஸ்வாதி, மகம், கேட்டை, திருவாதிரை, உரோகிணி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி இந்த நாட்களிற் குஜசஞ்சாரமுண்டேல் சம்வர்த்தகாதி மேகங்கள் கெட்டு அனுவிருஷ்டியுண்டாகும்.

ஹஸ்தமுதல் ஆறுநாட்கள்வரை புதசஞ்சார காலமாயின், ஜனங்கட்குச் சுபிக்ஷமும் க்ஷேமமும் ஆரோக்கியமும் உண்டாய்ப் பசுக்களுக்குப் பீடையுண்டாகும்.

ஜேஷ்டமாத சுக்கிலபக்ஷத்தில் திருவாதிரை முதற் பத்துநக்ஷத்திரங்கள்வரை மழைபொழிந்தாற் பின் மழைபெய்யாது. மழை பொழியாவிடின், பின்பு நல்ல மழையுண்டு.

சூரியன் மிருகசிரத்திலிருக்கும்போது மழைபெய்தால் அதுமுதல் இரவி ஆயில்யத்திலிருக்கும்வரை நல்ல மழையுண்டு. மகத்திலிருக்கும்போது இடி இடித்தால் அதுமுதற் சித்திரையிலிருக்கும்வரை 'நல்ல மழையுண்டு. ஸ்வாதியிலிருக்கும்போது மின்னினால் அதுமுதல் மூலத்திலிருக்கும் வரை நல்லமழையுண்டு.

கார்த்திகை மாதத்தின் அமாவாசியையிற் சுவாதியாவது விசாகமாவது இருந்து அதனோடு ஞாயிறு, திங்கள், செவ்வாய், வியாழன் இத்தினங்களி லொன்றிருந்தால், அப்போது காற்று மழையுண்டாகி மனுஷர் - பசுக்கள் - மிருகங்க ளிவர்களுக்கு நாசமுண்டாகும்.

கார்த்திகை மாதத்தின் அமாவாசியையில் ஸ்வாதி விசாகங்களிற் செவ்வாய்,புதன், வியாழன், ஞாயிறு, சனி இவ்வாரத்திலொன்று கூடினாற் பெருங்காற்றும் மழையுமுண்டாகி, விருக்ஷங்கள் சாய்ந்தும் மலைகள் சரிந்தும் கன்மழைத்தாரைகள் விழுந்தும் மனிதர் பசு பக்ஷி முதலானவர்கள் நாசமடைவார்கள்.

கார்த்திகை மாதத்தின் அமாவாசியை யன்று விசாக நக்ஷத்திரமும் ஞாயற்றுக்கிழமையும் அதிகண்ட யோகமும் கூடினாற் பெருங்காற்றும் பெருமழையுமுண்டு.

சிங்கமாதம் முதற்றேதி மழைபெய்தால் அந்த மாதத்தில் மழையில்லை. கடகமாத முதற்றேதியில் மழைபெய்யாவிட்டால் அந்த மாதத்தில் மழையில்லை. கன்னியாமாசம் முதற்றேதி மழைபெய்தால் அந்த மாதத்தில் அதிவிருஷ்டியுண்டு. துலா மாதம் முதற்றேதி மழைபெய்தால் அந்த மாதத்தில் நல்ல மழையுண்டு.

சூரியன் ஆதிரையிற் பிரவேசிக்கும்போது மழை பெய்தால் அதுமுதல் 60-நாளைக்கு மழையில்லை. ஆதிரையிற் பிரவேசிக்கும்போது பகற்காலமாயிருந்து மழைபெய்தால் தோஷமில்லை.

திருவாதிரையிற் சூரியன் பிரவேசிக்குங் காலத்தில் அவற்குக் கேந்திர திரிகோணத்திற் குரு சந்திரர் கூடியிருந்து சுக்கிரன், குரு சந்திரர்களைப் பார்த்தால் அந்த வருஷத்தில் மேகங்கள் உண்டாகி நல்ல மழை பெய்யும்.

மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி இம்மாதங்களில் என்று அதிகக் குளிர்ச்சியாயும், அதிக உஷ்ணமாயும், ஆகாயம் நிர்மலமாயும், மந்த வாயு அல்லது அதிகக் காற்றும் இருக்கிறதோ அன்று தவளைகத்தினலும் சூரிய மண்டல சந்திர மண்டலங்களில் மயிலிறகுச்சாயலாயிருந்தாலும் அன்றுமுதல் மூன்று நாட்கள் வரைக்கும் நல்ல மழைபெய்யும்.

சூரியனுக்கும் சந்திரனுக்கும் முதல் யாமத்திற் பரிவேடமிருந்தால் லோகபீடை. இரண்டாம் யாமத்திற் சுவிருஷ்டி. மூன்றும் யாமத்திற் சுபிக்ஷம். நான்காம் யாமத்திற் சுவிருஷ்டி. குருவையும் சந்திரனையும் சேர்த்துப் பரிவேட மிட்டிருந்தாற் பிராமணோத்தமர்கட்குப் பீடை. சனி, குஜன் இவர்கள் பால் அவ்விதமிருப்பிற் கலகம். புதனையுஞ் சந்திரனையும் சேர்த்துப் பரிவேட மிட்டிருந்தால் ஸ்திரீகளுக்கு நாசம். சுக்கிரனையுஞ் சந்திரனையும் சேர்த்துப் பரிவேடம் சுற்றியிருந்தால் எல்லாவற்றிற்கும் நாசமுண்டாகும்.

சித்திரை வைகாசிகளில் இரவியையாவது மதியையாவது பரிவேடமிட்டிருந்தால், அரசர்களுக்குள் யுத்தம் இராஜ்ஜியத்திற்குக் கெடுதி. ஆனி, ஆடிகளில் அவ்விதங் காணப்பெறுமேல் மழைக்குறைவுண்டாகும். மார்கழி, தை மாதங்களில் இருந்தாற் பசு நாச

முண்டு. மாசி-பங்குனிகளிலிருந்தால் திருடர் பயம், அக்கினி பயமிவையுண்டு.

சூரிய க்ஷேத்திரத்திற் கிரகங்கள் சேர்ந்தால் மழையில்லை. சந்திர க்ஷேத்திரத்திற் சேர்ந்தால் மழையுண்டு. செவ்வாய் க்ஷேத்திரத்திற் சேர்ந்தால் யுத்தமுண்டு. புதக்ஷேத்திரத்திற் சேர்ந்தாற் பெருங் காற்றினாற் சேதமுண்டாகும். குருக்ஷேத்திரத்திற் சேர்ந்தால் ஆரோக்கியமுண்டாகும். சுக்கிரக்ஷேத்திரத்திற் சேர்ந்தால் அதிக மழையுண்டு. சனிக்ஷேத்திரத்திற் சேர்ந்தால் வியாதியாற் பயமுண்டு.

இரண்டு கிரகங்கள் சேர்ந்தால் ஜனங்களுக்குக் கஷ்டம்.

3-கிரகங்கள் சேர்ந்தால் அரசர்களுக்குப் பீடை.

4-கிரகங்கள் சேர்ந்தாற் றேசத்திற்குப் பீடை.

5-கிரகங்கள் சேர்ந்தாற் றிரிலோகத்திற்கும் பீடை.

6-கிரகங்கள் சேர்ந்தால் ராச்சியத்துக்குப் பீடை.

7-கிரகங்கள் சேர்ந்தால் ராச்சியத்துக்குப் பீடை.

* 8-கிரகங்கள் சேர்ந்தால் ஜனசஞ்சாரமில்லாமல் நாசமுண்டாகும்.

**ஜன்மராசிகளிற் கிரகங்கள் சேர்வதின் பலன்.**

ஜன்ம லக்கினத்திலாவது ஜன்ம ராசியிலாவது கிரகங்கள் கூடியிருந்தால் அபமிருத்யு, 2-ல் தனநாசம், 3-ல் சம்பத்து, 4-ல் தனநாசம், 5-ல் அபமிருத்யு, 6-ல் சத்துருநாசம், 7-ல் பாக்கியஹானி, 8-ல் மிருத்தியு, 9-ல் தருமநாசம், 10-ல் கர்மநாசம், 11-ல் இலாபம், 12-ல் மிருத்து. கெட்ட பலம் ஆறு மாதங்களுக்கு முன்னே நடக்கும். (கெட்ட பலனென்பது இரண்டாமிடத்திற்குப் பின் சம்பவிக்கும்.) எந்த ராசியிற் கிரகஞ் சேர்கிறதோ அந்த ராசியில் அவ்விராசியதிபனும், அவ்விராசியினொன்பதாமதிபனும் சேர்ந்திருப்பின், தோஷமில்லை.

* கற்பாந்த காலத்தில் மட்டுஞ் சம்பவிக்கு மன்றி மற்றைக்காலத்தி லிவ்விதஞ் சம்பவித்தல் அரிது.

ஜன்மராசியிலாவது ஜன்மலக்னத்திலாவது கூடக்கிரகங்களிருந்தாலும் கிரகணம் பிடித்தாலும், ஜபஹோமங்கள் விதிப்படி செய்து தானங்கொடுக்கவேண்டியது.

சித்திரை, விசாகம், மிருகசிரம் இந்த நக்ஷத்திரங்களில் அங்காரகனிருந்தாலும் உதயமானாலும் நல்ல மழை.

மழைக்காலத்திற் சுக்கிரனுக்கு 7-ற் சந்திரனிருந்து சுக்கிரற்குச் சுபர்களின் பார்வையிருந்தாலும் அல்லது அவற்கு 5, 7, 9-ற் சனியிருந்தாலும் விசேஷ மழையுண்டு.

குரு அஸ்தமித்தாலும், சுக்கிரன் உதித்தாலும், அங்காரகன் அஸ்தமித்தாலும் மழைக்காலத்தில் மழையுண்டு. சந்திரற்கு 5, 7-ற் சனியாவது செவ்வாயாவது இருந்தாற் காற்று மழையுமுண்டாகும்.

சனி சந்திரன் சுக்கிரன் மூவரும் ஓரிராசியிலிருந்தாற் கௌதமி நதிக்குத் தெற்கேயுள்ள தேசத்திலும், காவிரிக்கு வடக்கேயுள்ள தேசத்திலும் நல்ல மழையுண்டு.

அஸ்வதி, பரணி யிவற்றிற் சூரியன் சஞ்சரிக்கையிற் சிறந்த மழைபெய்தால் தேசத்திற்குச் சுபிக்ஷம், க்ஷேமம் இவையுண்டு. கார்த்திகையில் இரவியிருக்கும்போது மழைபெய்தாற் பேதியம்மை முதலிய ஈதிபாதைகள் உண்டாகும். உரோகிணி, மிருகசிரங்களிலிருக்கையில் மழை பெய்தாற் பயிர் விருத்தியுண்டு. திருவாதிரைப் பிரவேசகாலத்தில் மழைபெய்தா லதுமுதல் 11-மாதங்கள்வரை மழையில்லை.

தூமகேது - குடை, கொடி, பாணம், வீணை, சாமரம், தோமரம் பாம்பு இவைபோல ஆகாசத்திற் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு இந்நான்கிடங்களிலுந் தோன்றினாற் றேசத்தில் க்ஷாமம் உண்டாகும். (சிவப்பு, புகை, கறுப்பு, வெண்மை, உதிரம், மஞ்சள் வர்ணமுடையவைகளாகவுந் தூமகேதுக்கள் தோன்றும்.)

இவற்றுள் வெண்மை நிறத்தோடு உதிரவர்ணங்கலந்துள்ள தூமகேதுத்தோன்றில் சுபிக்ஷமுண்டு. புகைவர்ணத்தோடு ரக்தவர்ணமுள்ள தூமகேது தோன்றினால் துர்ப்பிக்ஷமுண்டு. கறுப்பாய்த் தோன்றினால் யுத்தமுண்டு.

சுவேதகேது கிழக்கிலும் மேற்கிலுந் தோன்றினுற் சுபிக்ஷம், சுவிருஷ்டி யிவையுண்டு. தெற்கிலும் வடக்கிலுந் தோன்றினுற் பசு நாசமுண்டு. வாயு திக்கிலும் ஆக்நேயத்திலுந் தோன்றினுல் ஜனங் களுக்கு ரோக பீடையுண்டு. தென்மேற்கிலும் வடகிழக்கிலும் தோன்றினுல் யுத்தமுண்டாகும். வால்நக்ஷத்திரம் தோன்றினுல் யானை முதலிய பெரிய ஜெந்துக்களுக்கு நாசமுண்டு. இது தலை கீழாகத் தோன்றினுல் அரசர்களுக்குக் கெடுதியுண்டு. குறுக்காகத் தோன்றினுற் பசு நாசமுண்டு.

அஸ்வதி, பரணி, விசாகம், கேட்டை இவை அங்காரக நக்ஷத் திரங்கள்.

திருவாதிரை, புனர்பூசம், ஹஸ்தம், சித்திரை, உத்தரம் இவை புதநக்ஷத்திரங்கள்.

மூலம், பூராடம், உத்திரட்டாதி, இரேவதி இவை குரு நக்ஷத் திரங்கள்.

மிருகசீரிடம், உரோகிணி, கார்த்திகை, ஸ்வாதி, விசாகம் இவை சுக்கிர நக்ஷத்திரங்கள்.

மகம், பூரம் இவை சூரிய நக்ஷத்திரங்கள்.

பூசம், ஆயில்யம் இவை சந்திர நக்ஷத்திரங்கள்.

உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி இவை சனி நக்ஷத்திரங்கள்.

முற்றும்.

(:0:)

## புட்பபந்தப் பிழைதிருத்தம்.

"செந்தமிழ்"ப் பத்தாந் தொகுதி சகூச-ஆம் பக்கம் ஏழாவது பத்தி இரண்டாவது வரியிற் சேத்து என்றிருப்பதைச் சேவ்வையாய் என்று திருத்திக்கொள்க.

ப. அ கிருஷ்ணஸ்வாமிப் பிள்ளை,
தரங்கம்பாடி.

NOV

ஸ்ரீ

# VIII.

# பாண்டிய சாசநம்

—:o:—

## கோநேரின்மைகொண்டான் சக்ரவர்த்தி காலம்.

திருஹவநசககவாததி கோனேரி(ன்)மைகொணடான திருககுரு
கூா பொலிஞசு (29) நினறருளின பரமஸவாமிகள் கோயில திருப
பதி ஸ்ரீவைஷ்ணவாகளுககு இப பொலிஞசு (30)......................ச
செமபினுடடு கீழைககோடுமளூரான மதுரோதயநலலூா அரையன
திருநாடுடையானை நிலகஙக்ரையாபோ (31) ால அரையன பூவனை
வேணுவுடையாா கணட திருநாடுடையான கணட சந (32) ககும
இவ வேணுவுடையான பிறநத உததரடடாதி நாள தீஸ௰ வ ஸா
திபபதாகக கணட சி (33) ததிரைத திருநாள பதினைஞசுககும திருப
படி மாறறுளளிடடு வேணடு நிமநதஙகளு (34) ககும திருநாள
படிககும திருவழுதிவளநாடடு சீவைகுநதமான ராஜேநதிர ஸூதுா
வேதி மஙகலததது கீழபிடாகை....................(35) கச..................
தமாய்பபோநத காவாலிககுக கீழெலலை இவிராஜேநதிர ஸூதுவேஷீ
மஙகலததது ஸபெஹயாா பறறுன கீழைககாவாலிககும சிஙகனகுறிச
சிப பறறுககும பெருஙகுளமான உததமபாணடிய நலலூாககு நீா
பாயகிற பெருஙகா (37) லுககும மேறகும தெனனெலலை திருத
துலைவிலலிமஙகலததது அரவிநதலோசனன தேவதானததுககும இவி
ராஜேநதி ஸூது (28) வெஷீமஙகலததது ஸபெஹயாா பறறுன புளி
யறைபபறறுககும பூணைககுடியான பறறுககும வடககும மேலெலலை
திருககுரு (39) கூா ஐஹுவிதானகள மடபபுறமான புதுலூாக
கரைககும இவிராஜேநதிர ஸூதுவெஷீமஙகலததது ஸபெஹயாா பற
றுககும (40) கிழககும வடவெலலை இவிராஜேநதிர ஸூதுவெஷீமஙக
லததது நினறும பெருஙகுளமான உததமபாணடியநலலூாககுப போ
(41) கிற பெருஙழிககுத தெறகும ஆக நானகெலலைக குடபட்ட

நிலம் முனனுடையாரும் ஜீவிதமும முதலும தவிர்த்து காராண (42) மை மியாடசியும கடமையும அநதராயமும விநியோகமும தருவதான அசசும காரிய வாராடசியும வெடடி பாடடமும பஞசுபீ (43) விசநது விககிரகபபெறும பொனவரியும. மறறும எபபெறபடடினவும உடபட பதினேனருவதின எதிராம ஆணடுமுதல தேவதா (44) ன இறையிலி யாக இடபபெறவேணுமெனறு ஐயன மழவராயன நமககுச சொனன மையில இப பொலிஞசுநினறருளினபரம (45) சுவாமிகளுககு இந நிலககரையாபோல இவ வேணுவுடையார கணட திருநாடுடையான சநதிககும இவ வேணுவுடையார பிறந (46) த உததரடடாதி நாள தீரததம பிரசாதிபபதாகக கணட சிததிரைததிருநாள பதினேஞசுக கும திருபபடி மாறறுளளிட்டு வேணடு நிபநதஙக

## தெற்குக் கடைசிப்பத்தி.

(1) ஞககும திருநாள படிககும இவிராஜேநதிர ஸூதுவெதி மஙகலததுக கிழபிடாகையில எழூர கைகொள(ர்)(2)ஜீவிதமாயபபோ நத காவாிககுக கிழெலலை இவிராஜேநதிரச சதுாவேதிமஙகலதது ஸபெஹையாரப (3) றருன கீழைககாவாிககும சஙகனகுறிசசி பற றுககும பெருஙகுளமான உததமபாணடிய நலலூரு (4) ககு பாயகிற பெருஙகாலுககுமேறகும தெனனெலலை திருததுலை விலலிமஙகலததது அரவிநத(5)லோசனனதேவதான தததுககுமஇவிராஜேநதிர ஸூதுவெதி மஙகலதது ஸபெஹையார பறறுன (6) புளியறைபறறுககும பூனைக குடியான பறறுககும வடககும மேலெலலை திருககுருகூா ஸ ஹ விஹா (7) னகள மடபபுறமான புதுவூரக கரைககும இவிராஜேந திர சதுவெதிமஙகலததது ஸபெஹையார பறறுககு கி (8) ழககும வட வெலலை இவிராஜேநதிர ஸூதுவெதிமஙகலததது நினறும பெருஙகுள மான உததமபாண (9) டிய நலலூருககுபபோகிற பெருவழிககுத தெறகும ஆக நானகெலலைககுடபடட நிலம முனனுடையாரும (10) ஜீவிதமும முதலுமதவிர (த்) து காராணமைமியாடசியும கடமையும அநதராயமும வினியோகமும தருவ (11) தான அசசும காரிய வாராடசியும வெடடி பாடடமும பஞசுபீவிசநது விககிரகபபெறும பொனவரியு (12) மறறும எப பெறபடடினவும (?) இவாணடுமுதல

தேவதான இறையிலியாக இடடு வரியிலககு எழுதிடட (13) உளவரி யும நம-ககெழுவிபபதாக சொனனேம கைககொணடு இபபடி சநதி ராதிததவற செலவதாக கலவிலும செ (14) மபிலும வெடடிவிததுக கொளக இவை அருமபொற கூறறததுப் புதுபபேரககுளத தாழவான ஆணடபி (15) ரான அழகனுன அழகிய பாணடியவிழுபபரையன எழுதது. யாணடு பதினெனருவது நாள சாகமச-ஞல (16) இவை அணடநாடடுப பெருமணலூா அரையன முடிவழஙகும பெருமா ளான விககிரமபாணடிய உததரமந (17) திரி எழுதது இவை செவி ருககைநாடடு சககரபாணிநலலூா அரையன விரத முடிததானுன பலலவராயன எழுதது.

ஆழ்வார் திருநகரியில் ஜுரநப்பிரான் என்னும் ஆதிவராகப் பிரான் சந்நிதியின் கீழைச்சுவர், வடசுவர், மேலைச்சுவர்களிலுள்ள சாசனங்கள் முற்றிற்று.

A. M. சடகோபராமாநுஜாசார்யன்,

திருச்சிராப்பள்ளி நாஷநல் ஹைஸ்கூல்.

---

உ

## வானசாஸ்திரம்.

(பத்தாந்தோகுதி சகூகூ-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

சந்திரனிலுள்ள எரிமலைகள் பூமியிற் காணப்படும் எரிமலைகட்குக் கொஞ்சமும் இளைத்தனவாகக் காணப்படவில்லை. அவைகளுடைய உற்பாதத்தால் அனேகவிடங்கள் உட்கவிவுடையனவாய்ச் சூரிய கிரணமே படாதனவாயிருக்கின்றன. மலைகளும் பரந்து நீண்டிருப்ப தோடு அநேக கொடுமுடிகளை யுடையனவாயுமிருக்கின்றன. அவை களுள் உயர்ந்தவை தக்ஷிண துருவத்தை யடுத்திருக்கின்றன. மொத் தத்தில் பீர், மார்ட்ளர் என்பவர்களா லளக்கப்பட்டவைகள் 1095

சிகரங்களென்றும், அவற்றில் 39 ஐரோப்பாதேசத்திற் பெரிய பர்வதமான ஆல்ப்ஸ்மலையி னுச்சியிலிருக்கும் பிளான் சிகரத்தைக் காட்டிலும் பெரியனவாயிருக்கின்றனவென்றும் 6500 கெஜ உயரமுடையனவென்றும் சொல்லப்படுகின்றன. இம்மலைகளைச் சுற்று மதில்களாகவுடைய அநேக சமதரைகள் புலப்படுகின்றன. அவைகளின் குறுக்களவு 100 முதல் 120 மைல்கட்குக் குறையாதிருப்பதாகத் தெரிகின்றது. ஷிக்கார்டென்ற இடமானது 133 மைல் குறுக்களவுடையதாயும் 3500 கெஜ வுயரமுடைய சுற்றுமதிலை யுடையதாயுமிருக்கின்றது. அம்மதில்களுக்கு மத்தியிலுள்ள தரையில் ஒருவன் நின்றுகொண்டு நாற்புறங்களையுஞ் சுற்றிப் பார்ப்பானாயின் அவன் அதனுச்சியைக் காண்பதரிதாகும். இவைகளெல்லாவற்றையும் விடக் கண்டோர்கள் அதிசயிக்கத்தக்கனவாக இரண்டு வஸ்துக்கள் புலப்படுகின்றன. அவை ஒளிப்பட்டைகளும், கீற்றுக்களுமாம். அவை பூர்ணிமையிற் செவ்வனே காணப்பட்டு, பின்பு அவ்வளவு திருப்திகரமாகத் தோன்றுவதில்லையாம். கீற்றுக்களை முதலிற் சந்திரனுளோடும் நதிகளென்றெண்ணியதுண்டு. பிறகு அவை மேடு பள்ளம் எங்கும் முறையின்றிச் செல்வதைக்கொண்டு இன்னதென நிச்சயிக்க முடியாதிருப்பதுடன் அவை தலையிலும் கடையிலும் குறுகியும், மத்தியில் அதிக அகலமுடையனவாயுமிருக்கின்றனவாம்.

இவ்வுலகிற் காணப்படுவதுபோலக் காற்றும் நீரும் சந்திரனிடத்து இருப்பனவாகத் தோற்றவில்லை. காற்றும் நீரு மிருக்குமாயின், சூரியவெப்பம் படுவதற்கேற்ற புகைப்படலங்கள் உண்டாக வேண்டும். சந்திரன் பூமிக்குச் சமீபமாகவிருப்பதால் இருநூறு கெஜ அகலமுள்ள புகைப்படலமுண்டாயினும் நமக்குத் தோற்றுவது நிச்சயம். மேலும், சூரியகிரணம் சந்திரனது மாதமான $29\text{-}\frac{53}{100}$ நாட்களுட் பாதிக்காலமாகிய $354\frac{1}{2}$ மணிநேரத்திற்கு இடைவிடாது படுவதால் எவ்விதமான புல் பூடு நீர் நிலைகளும் வறண்டுவிடும். நீர் வறண்டாற் புகைப்படலமாவதைத்தவிர்த்து வேறுவிதமாகச் செல்ல ஏதுவில்லை. ஆதலாற் சந்திரனில் நீர் இல்லையெனத் தீர்மானிக்கலாம். எப்போது ஜலமில்லையோ அப்போது காற்றுமில்லையென்பது நிதர்சனம். ஏற்கனவே சொல்லப்பட்ட சமுத்திரங்களென்பவை ஒரே சம பரப்பினை யுடையனவாயிருப்பதால், அவைகள் ஒருக்காற் சமுத்

திரமாயிருந்து பூமி காலபேதவியல்புக்குட்பட்டு மாறுவதுபோல் அவைகளும் பேதத்தையடைந்திருக்கலாமென ஊகிக்கப்படுகின்றன.

---

## செவ்வாய்.

நமது பூமிக்கு அடுத்தபடியாகச் சூரியனை வலம்வருவது அங்காரகனேயாம். இக்கிரகமானது சிவந்த வர்ணமாகக் காணப்படுமாயினும் தூரதிருஷ்டிகொண்டு பார்க்கும்போது அதன் விளிம்பு சற்று மஞ்சள்கலந்த நீலநிறமுடையதாகத் தோற்றும். இக்கிரகம் பார்ப்பவர் கண்கள் கூசுந் தன்மையுடையதன்று. நக்ஷத்திரமண்டலத்திலுள்ள நக்ஷத்திரங்களைப் பார்க்கும்பொழுது இச் செவ்வாயின் சிவந்த நிறத்தால் இதனைக் கண்டுபிடித்தல் சுலபமேயாம். இதற்குண்டாயிருக்கு மொளியும் மற்றைய கிரகங்கட்கிருப்பதுபோற் சூரியனிடத்திருந் துண்டாகியதேயாம். சந்திரனைக்காட்டிலும் இக்கிரகம் பூமிக்குச் சற்றுத்தூரத்திலிருப்பினும் இதனைச் சோதிப்பதே ஒரு சந்தோஷமான காரியமென மேல்நாட்டு வானசாஸ்திரிகள் எண்ணுகின்றனர்.

இதன் சீதோஷ்ணஸ்திதி பூமியைவிடச் சௌக்கியமானதாகவிருப்பதால் அங்கு ஜீவராசிகள் வசிக்கக்கூடுமென இப்பொழுது அதனுண்மை பரிசோதிக்கப்பட்டு வருகிறது. அங்காரக மண்டலத்தின் குறுக்களவு 4363-மைலென்றும் சிலர் ஏறக்குறைய 5000-மைலென்றும் கணக்கிட்டிருக்கின்றனர்.* அதாவது சற்றேறத்தாழப் பூமியைவிட இரண்டரை மடங்கு சிறியதென்பதாம். அதன் கனம் நமது பூமியின் கனத்தைவிட முக்காற்பங்கு இலேசானதாயும், நீரைவிட நான்கு பங்கு கனத்ததாயுமிருக்கிறது.

இக்கிரகம் சகண்டொன்றுக்கு 16 மைல்வீதஞ்செல்லுகின்றது. சூரியனைச் சராசரி இரண்டுவருடம் ஒருமாதம் 19 நாட்களிற் சுற்றுகிறது. இது, சூரியனிடத்து அதிகமாக நெருங்கும்போது

---

* கெய்மான் என்னும் பிராஞ்சிய பண்டிதர் 4363 என்றும், புரோக்டர் என்னும் ஆங்கிலபண்டிதர் ஏறக்குறைய 5000 மென்றுங் கூறுவர்.

2,304,000 மைலும், விலகும்போது 126,318,000 மைலு மிருக்கி றன. அதன் மந்தோச்ச சீக்கிரோச்சவித்தியாசம் 26000000 மைலாகும். இதனால் இதன் வட்டமானது சக்கிரமாயிராது அண்ட வடிவினையுடையதாகும். இக்கிரகமும் பூமியைப்போலத் துருவங்களிற் றட்டையாயும் மத்தியிற் பருத்துமிருக்கும். சூரியனுக்கும் அங்காரகனுக்குமுள்ள மத்தியதூரத்தாற்,சீதோஷ்ணங்கள் பூமியைக் காட்டிலும் 9-க்கும் 4-க்குமுள்ள வித்தியாசம்போன்று தோற்றும். முன்னே அங்காரகவாண்டு† இவ்வளவெனக் குறிக்கப்பட்டிருக்கிறது. துருவங்களிற் பருவங்கள் நீட்டித்துக் காணப்படுமாயினும் அதனது மத்தியரேகை அதன் வட்டத்திற்கு $27\frac{1}{4}$ பாகையே சாய்வாயிருப்பதால், $23\frac{1}{2}$ பாகை சாய்வாயிருக்கும் பூமியிற் றோற்றும் ருதுக்களுக்கு மதற்கும் அதிக வித்தியாசமிருக்கக் காரணமில்லை. அங்காரகனுக்குச் சூரியன் அதிதூரத்திலிருக்கும்போது கோடைகால முண்டாகிறது.

அங்காரகன் தன்னைத்தானே 24மணி 33 நிமிஷம் 227 சகண்டிற் சுற்றுகிறது. அப்படிச் சுற்றுவதால் அடிக்கடி பேதங்கள் தோற்றுகின்றன. உற்றுப் பார்க்கும்போது அதன் இருதலைகளிலும் இரண்டு வெண்மையான ஒளிப்பாகங்கள் காணப்படுகின்றன. விளிம்போரமெல்லாம் வெண்மையாகத் தோற்றுகின்றனவென மேலே கூறினும். அவை அதிக ஜோதியாக ஓரம்வரையிற் றென்படுகின்றன. இதனைச் சுற்றி இரண்டு உபக்கிரகங்கள் $30\frac{1}{4}$ மணியிலும் $7\frac{2}{3}$ மணியிலும் ஓடுவனவாக 1877மாண்டிற் கண்டுபிடிக்கப்பட்டன.

இருநூறு வருடங்கட்கு முன்னரே செவ்வாய் மண்டலத்தின் பாப்பிற் காணப்படும் சிவப்பும் இருட்பாகமும் திடீரென வுண்டாகியதல்லவென்றும், சாசுவதமானவையென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. இருட்பாகங்கள் நீர் நிறைந்த விடமென்றும், ஒளிப்பாகங்கள் பூமியென்றும் அந்நாட்டொட்டு இதுகாறும் தீர்மானித்து வருகின்றனர். நமது பூமி யிருப்பதுபோலவே அங்கும் நான்கு பக்கங்களிலும் ஜலத்தாற் சூழப்பட்ட பூமி யிருக்கின்றது. அவற்றை ஐரோப்பிய வானசாஸ்திரிகள் கண்டுபிடித்தவர்கள் பெயரால்வழங்கு

† 687 நாளென்பர் புரோக்டர்.

கின்றனர். இதற்குற்ற சாக்ஷியங்களென்னவென்று விசாரிப்பது சகஜமே. சந்திரனிலும் அனேக சமுத்திரங்களிருப்பதாகப் பெயரிட்டு வழங்கிவந்து, இப்போது சமுத்திரமே யில்லையென்று வானசாஸ்திரிகளாற்சொல்லப்படுவதும், உண்மைதான். ஆயினும் அப்படி யிதிற்றென்படுவதில்லை. ஒருக்கால் டால்ஸ்என்னும் சாஸ்திரக்ஞர் அதனைச் சோதித்துக்கொண்டிருக்கும்போது மறைந்திருந்த ஒரு இடம் வரவர விலக ஆரம்பித்துச் சுத்தமாக ஒருமணி நேரத்திற்குள் தோற்றிற்றும். நமக்கு அதன் மத்தியரேகை முதலியன தெரிந்திருப்பதால் இன்னகாலம்சென்று வருகிறதெனக் கண்டுபிடிப்பது சுலபம். அப்படிப்பார்த்து அது மாரிகாலமாயிருந்ததால் நமது நாட்டிலும் மாரிகாலத்தில் உச்சி வெடிவெடிப்பதுபோல வெடித்திருக்க வேண்டுமெனத் தீர்மானித்தனர். சிதோஷ்ண ஸ்திதி பூமியைவிடச் சௌகரியமாயிருப்பதால் அங்குக் கோடை மாரிகாலங்கள் அதற்குத்தக்கபடி இருக்கக்கூடும். நம் நாட்டிலேயே மாரிகாலத்தில் அதிகமப்பும் மந்தாரமுமாயிருக்குமாயின் அங்கு எப்படி யிருக்கவேண்டும். இதனைக் கண்டு சிலர் மயக்குறுகின்றனராம். அப்படி மயக்குறக் காரணமில்லையெனச் செவ்வனே யாராய்ச்சி செய்திருக்கின்றனர்.

சிற்சில சமயங்களிற் செவ்வாயை நன்குயாராய்ச்சிசெய்ய இடந்தராது மூடும் பொருள் ஜலபதார்த்தமெனக் கொள்ளவேண்டி யிருப்பதால் அங்கு நீர்நிலைக ளிருக்கின்றனவென்பது நிச்சயம். ஆகவே நமது சமுத்திரங்கள் நீலநிறமாய்த் தோற்றுவதால், செவ்வாயினும் பூபாகம் சிவந்தும், நீர்ப்பாகம் நீலமாயும் தோற்றுகிறது. வர்ண சோதனையால் நமது பூமியிற்றோற்றும் நீராவிப்படலம் முதலியன அங்கும் தோற்றுவதாக நிச்சயித்திருக்கின்றனர். ஆனாலவை யிங்குப் பூமியிற்படும் உஷ்ணம் மறுபடி சூரியனிடம் செல்லாமற்றடுப்பதுபோல வங்கும் தடுக்க உபயோகப்படுவதோடு பூமியையும் மழை ரூபமாக வளஞ்செய்யக்கூடும். மழையிருக்குமாயின் காற்றிருந்தே தீரவேண்டும். ஆகையால் வாயு வியாபித்திருக்கிறதென்பதுமுண்மையேயாம்.

இவைகளெல்லாம் இருக்கும்போது ஜீவராசிகளு மிருக்கவேண்டுமென மேல்நாட்டு மேதாவிக ளெண்ணுகின்றனர். அந்த எண்ணத்

தைப் பூர்த்திசெய்து அப்படி அறிவுடையோ ரிருக்கின்றதாவெனச் சோதிக்கவேண்டிய ஏற்பாடுகள் செய்துவருவதாகச் சமாசாரப் பத்திரிகைகள் மூலமாய் வாசித்த ஞாபகமிருக்கிறது. அப்படியுமிருக்குமாயின் அதுவும் வியப்பாயிருக்குமென்பதிற் றடையென்னே.

---

## வியாழன்.

இதுவரை நமது பூமிக்குச் சமீபமாயிருந்த கிரகங்களையும் பூமியையும்பற்றிச் சொல்லிவந்தோம். இப்பொழுது நமது பூமிக்கும் சூரியனுக்கும் அதிக தூரத்திலிருக்கும் கிரகமான பிரகஸ்பதியைப் பற்றிப் பேசுவோம். இந்தக் கிரகமானது நமது பூமிக்கு வெகு தூரத்தி (475692000 மைல்) லிருப்பதால் அதனைத் தூரதிருஷ்டி கொண்டு காண்பது முடியாதகாரியமாகிறது. இக்கிரகமானது மற்றைக் கிரகங்களைப்போலன்றித் தன்னை நான்குஉபக்கிரகங்கள் சுற்றிக் கொண்டுவரச் செல்கின்றது. இக்கிரகம் முழுதும் வட்டவடிவமாயின்றித் தட்டையாகவிருக்கிறது. அதன் குறுக்களவு 85000மைல்* அல்லது பூமியைவிடப் பதினறுமடங்கு பெரியது. சந்திரனினின்றும் பார்க்கின், 33 மடங்கு அதனைவிடப் பெரிதாயும், ஆயிரஞ் சந்திரர்களுதயமாகு மொளியுடையதாகவுமிருக்கும்.

இவ்வளவு பெரிய கிரகமாயினும், அது தன்னைத்தானே 9மணி 55 நிமிஷம் 26 சகண்டிற் சுற்றிக்கொள்கிறதென, அக்கிரகத்திற் றோற்றும் புள்ளிகள்கொண்டு கணக்கிட்டிருக்கின்றனர். இக்கிரகம் மத்தியரேகைக்கு 87 பாகைதான் சாய்வாகையால் அதனிரவு பகல் வித்தியாசத்திற்குக் காரணமில்லை. எக்காலமும் வசந்தமாகவே யிருக்கவேண்டுமாம். இது ஒருதரம் சூரியனைச்சுற்ற ஏறக்குறைய 12 வருடங்கள் (சரியாக 4232½ நாட்கள்) செல்லுகின்றன. அப்படியாயின் அதனது சுற்று 10478 ஆகவேண்டும். இது இவ்வளவு பெரியதாயினும் சூரியனொளிதான் இதற்கும் வேண்டியிருக்கிறது. இது பூமியைவிட 1387,431 மடங்கு கனமுள்ளது.

---

* லாசகிரென்பவர் 85390 மைலென்பர்.

இதன் மத்தியில் அனேக கோடுகள் புலப்படுகின்றன. அவைகளுட் சில சிவந்த நிறமாயுந் தோன்றுகின்றன.

இதனைச்சுற்றி நான்கு உபக்கிரகங்கள் ஓடுகின்றனவென்றோம். ஒவ்வொன்றும் தன்னைச் சுற்றும் காலமும் ஒன்றற்கொன்றுள்ள தூரமும் பின்வருமாறு காண்க.

| | நாள் | மணி | மினிட் | ஒன்றற்கொன்றுள்ள தூரம் |
|---|---|---|---|---|
| முதலாவது (அயோ) | 1 | 18 | 28 | 2352 |
| இரண்டாவது(யூரோபா) | 3 | 13 | 43 | 2099 |
| மூன்றாவது (கனிமீட்) | 7 | 3 | 43 | 3436 |
| நான்காவது(காலின்டோ) | 16 | 16 | 32 | 2929. |

மேற்கூறிய உபக்கிரகங்கள் சுற்றுங்காலத்தை யுற்றுநோக்கின், அவைகள் சந்திரனைவிட அதிக வேகமாகச் சுழலுகின்றனவென்பது தெளிவாம். நமது நாட்டிற் கிரகணமுண்டாவதுபோன்று இந்தஉபக்கிரகங்களாலும் வியாழன் மறைக்கப்படுகிறதென்று நமக்குப்புலப்படுகிறது. பிரகஸ்பதியினிடத்து ஜீவராசிகள் வசிக்கக்கூடு மென்பதற்கான தோற்றமிருப்பினும் பூமிக்கு இக்கிரகம் வெகுதூரத்திலிருப்பதா லொன்றும் நிச்சயமாகச் சொல்லக்கூடவில்லை.

---

## சநி.

முன்னர் நமது பூமியைவிட அனேக மடங்கு பெரிதானவொரு உலக மிருப்பதாகச் சொன்னோம். அதுவேயொரு ஆச்சரியகரமான விஷயமாயினும், இப்பொழுது அதினுமொரு விசேஷமான விஷயமொன்று வெளிப்படுகிறது. பிரகஸ்பதி மண்டலத்திற்கு அடுத்ததாக வருவது சநி மண்டலமாம். இக்கிரகமானது மற்றவைகளைப்போற் றனித்திராது ஒரு வளையமிட்டுத் தோன்றுகிறது. நக்ஷத்திர சாலைகளிலுள்ள தூரதிருஷ்டிகொண்டு அதனிற் பழக்கமுறாத வொருவன் கூட மந்தனை யுற்றுநோக்குவனாயின் அவனுக்கு அவ்வளையத்துடன்

ரேற்றுகிறது. இக்கிரகத்தை முதன்முதலில் நச்சுக்குழாய்கொண்டு பார்த்தபோது இருபக்கங்களிலும் இரண்டு ஸ்தம்பங்களிருப்பதாயும் நடுவில் இக்கிரகம் தோன்றுவதுபோலவும் காணப்பட்டதாக எழுதியிருக்கிறார். பிறகு ஐரோப்பிய நிபுணர்கள் கருவிகொண்டு சோதித்தபோது, இக்கிரகத்தை யொரு சோதி வளையம் வளைந்துகொண்டிருப்பதாக விளங்கிற்று. இந்த வளையத்தி னிருபாகங்கள்தான் காலிலியோ வென்னும் வானசாஸ்திரிக்கு தூண்களைப்போற் றோற்றியதாம்.

இக்கிரகம் சூரியனைச்சுற்றிச் சக்கிராகாரமாயோடாது, அண்டாகிருதியாக வோடுகிறது. இது தன்னைத்தானே 10 மணி 29 நிமிஷம் 17 சகண்டில் சுற்றுகிறது. இது சூரியனை முழுவதுஞ் சுற்ற 24630 தரம் சுழலவேண்டும்; அப்போது நமக்கேற்பட்டிருக்கு மிராசிமண்டலத்தை மந்தன் சுற்ற 30 வருடமாகிறதென்பது நிச்சயமாகிறது. சாதாரணமாக இந்த 24630ஐ வருஷமான 360க்கிய $68\frac{1}{2}$ ஈவு கிடைக்கிறது. சநி 10 மணி 29 நிமிஷம் 17 சகண்டு அல்லது அரைநாளுக் குள்ளாகவே தன்னைச் சுற்றிக்கொள்வதால் $68\frac{1}{2}$யிற் பாதிக்குட்பட்டே சூரியனைச் சுற்றி மறுபடி யதேயிடத்திற்கு வரச் செல்கிறதென்பது பார்வையிற் றெரிகிறது. கணக்கிடச் சரியாகவே யிருக்கும். கிரகங்கள் சாதாரணமாகப் பூமிக்கு எதிரிலும் சூரியனுக்குப் புறம்பேயு மிருக்கும்போது சமீபத்திலும், சூரியன் கடையிலும் கிரகம் மத்தியிலுமிருக்கும்போ ததிகதூரத்திலுந்தென்படும். இதற்குக் காரணம் அவைகளு ளொவ்வொன்றும் அந்தரத்திற் செல்வதுதான். இதுவுமன்றி இரண்டும் வட்டரேகையிற் (இராசிமண்டலம்) சென்றுகொண்டிருப்பது மொன்று. சூரியனைச்சுற்றி விருத்தமாகச் சநி யோடாது அண்டாகிருதியாக வோடுவதால் ஓரிடம் அருகாகவும் ஓரிடம் தூரமாயுமிருக்குமன்றோ. அதன்படி சமீபதிருஷ்டி 823301000 மைலும் தூரதிருஷ்டி 920973000 மைலுமிருக்கின்றன. பூமிக்கு 732000000 மைலும் 1002000000 மைலுமாயிருக்கும். இவ்வளவு தூரத்திலிருந்தும் நக்ஷத்திரங்களை யறிந்தோர் இது தான் சநி யென்று ஒன்றைக் காட்டுகின்றனரேயெனின், அதன் ஆகிருதி பூமியைவிட 9 மடங்கு அதிகமானதென்பது அதன் விட்டம்

70100 மைலென்பதால் விளங்கும். அதன் கனவளவு 700 மடங் கதிகமானதா யிருக்கக்கூடுமெனக் கணக்கிடுகின்றனர்.

சூரியன் அதிக தூரத்திலிருப்பதால் சூரியனொளி அவ்வளவா கப் படுவதில்லையாம். ஆயினும், வானசாஸ்திரத்தைக்கொண்டும், மற்றும் கருவிகளைக்கொண்டும் பார்க்கும்போது பூமிக்கு இக்கிரகத் தாற் றென்படுமொளி காணவேண்டியதற் கதிகமாகவிருப்பதாகத் தெரிகிறது. இதனைச் சுற்றியிருக்கும் மண்டலங்கள் கடின பதார்த் தமுமன்று; ஜலபதார்த்தமுமன்று. இருவகையாகச் சொல்லப்படக் கூடாததா யிருந்ததோடு அவைகளாற் சநிக்கு அதிக வொளிபெறக் கூடியதாயுமில்லை. இதன் எட்டு உபக்கிரகங்களுஞ் சேர்ந்தா லது கொடுக்கக்கூடாதோவென்று லவைகள் நமது சந்திரனைவிட 2, 1, $1\frac{1}{4}$, $\frac{3}{4}$, $\frac{5}{8}$, $\frac{1}{3}$, 1/100, 1/40 ஆகிருதியுடையனவாயும், எல்லாஞ் சேர்ந் தாலு மிந்துவைப்போ லாறுசோமன்கள் கூடிய இடமே யுடையதா கையாலும் அவற்றால் தனக் கவ்வளவு பிரயோஜனமற்றதாயிற்று. இதனிடையில் 1805ல் சநியினிடத்துச் சிலஉற்பாதங்கள், அதாவது அதன்விருத்தாகாரம் மறைந்து கிரகமே நாற்கோணச்சார்வா யிருப்ப தாகச் சர்உவில்லியம் ஹெர்ஷலென்னும்பேர்பெற்ற வானவிற்பன்னர் தெரிவித்தார். அதனைப்போ லனேக நிபுணர்கள் கண்டனராயினும் பலர் பலவிதமாகத் தீர்மானித்தனர். முடிவாக பிராக்டர் என்னும் நிபுணர் இவைகளைச் செவ்வனே யாராய்ந்து அதனிடம் இயல்பாக வே உஷ்ணமிருக்கிறதென்றும், அதனாலுண்டாகும் புகை மேகங்கள் அவ்விதம் உயரக்கிளம்பி அதன் விருத்தாகாரத்தை மறைக்கின்றன வென்றும் தீர்மானித்தார். அதனையே இதுவரையிலுமுள்ள சாஸ் திர விற்பன்னர்க ளொப்புக்கொண்டு வருகின்றனர். அதனாலேயே நமக்கு அதிக ஒளிபெற விடமுண்டாகிறது.

(தொடரும்.)

இலக்கணவிளக்க பரம்பரை,

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

ஸ்ரீ:

# பக்தி வைபவம்.

## ஈசுவரதத்துவம்.

1. உலகம்யாவையுந்தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலும்நீக்கலும்நீங்கலா
அலகிலாவிளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கேசரணங்களே.

2. ஆக்குமாறயனுமுதலாக்கியவுலகம்
காக்குமாறுசெங்கண்ணிறைகருணையங்கடலாம்
வீக்குமாறரனுமவைவீந்தநாண்மீளப்
பூக்குமாமுதலெவனவன்பொன்னடிபோற்றி.

எவன் ஈசுவரன்:—எவனிடத்திலிருந்து இந்தப்பிரபஞ்சம் உண்டாயிற்றோ, எவனுடைய ஆஞ்ஞையின்மூலம் இப் பிரபஞ்சம் நடக்கிறதோ, எவனிடத்தில் இப் பிரபஞ்சம் லயமாகிறதோ, பிரபஞ்சம் லயமாகியபின் எவனிடத்திலிருந்து மீள உண்டாகிறதோ ஆகிய இவற்றிற்கெல்லாம் முதற்காரணமான தனி வஸ்து எவனோ அவனே ஈசுவரன். அவனே நித்தியமாயுள்ளவன், பரிசுத்தமானவன், எப்போதும் சுயேச்சையுள்ளவன், ஸர்வ வல்லமையுள்ளவன், ஸர்வஞ்ஞன், பரம காருண்யப்பிரபு, நிர்விசேஷமானவன், நிர்விகாரமானவன், நிச்சலமாயுள்ளவன், மேருகிரியைப்போல்ஸ்திரமாயுள்ளவன், சிந்மயன், அநிர்வசனீயமானவன், குருவுக்கெல்லாங்குரு ஆகிய இவைமுதலிய குண விசிஷ்டனாயும் குணரகிதனாயும் இருக்கிறான். கடவுள் இருப்பு. ஆகாயத்தில் இரவில் அநேக நக்ஷத்திரங்களைக் காண்கின்றோம். ஆனால் அவை சூரியோதயமானபோது காணப்படுவதில்லை. அந்தக் காரணத்தைக்கொண்டு பகலில் ஆகாயத்தில் நக்ஷத்திரங்களே இல்லையென்று கூறலாமா? அவ்வாறே அஞ்ஞானதசையில் ஈசனைக்காணப் பெறாத காரணத்தால் ஈசுவரன் இல்லையென்று சொல்லுதல்கூடாது.

நீர் என்ற ஒரு பொருளையே ஜலம், வாரி, பாணி என்று இவை முதலிய பல, சொற்களால் வழங்குவதுபோலவே ஆநந்தஸ்வரூபமாகிய பிரமத்தைப் பலர் பலவிதமாகக் கூறுவர். குயவனது கடையில் குடம், பானை, ஜாடி, கலயம், தாலம் முதலிய பலவகை யுருவமைந்த பாத்திரங்கள் இருந்தபோதிலும் அவையாவும் மண்ணாற் செய்யப்பட்டனவேயாகும். அவ்வாறே கடவுளும் ஒருவரேயாயினும் வெவ்வேறு காலதேச வர்த்தமானங்களால் வெவ்வேறு நாமரூபங்களால் பூஜிக்கப்படுகின்றார். கடவுள் ஒருவரேயாயின் வெவ்வேறு சமயங்களிற் கூறும் வண்ணம் வெவ்வேறு தன்மையாய்க் காணப்படுவது எங்ஙனம்? என்பார்க்கு வீட்டின் ஒரே யஜமானன் ஒருவனுக்குப் பிதாவாயும் மற்றொருவனுக்குச் சகோதரனாயும் ஒருத்திக்குக் கணவனாயும் இவ்வாறு பல பிரகாரங்களாற் காணப்படுவதுபோல எந்த எந்தப் பக்தனுக்கு எந்தப்பிரகாரம் காட்சி அளித்தாரோ அந்தந்தப்பிரகாரங்களாக வர்ணிக்கப்படுகின்றார் என்றும், மாடிமேல் ஏறுவதற்கு ஏணி மூங்கில், படிக்கட்டு, கயிறுமுதலிய சாதனங்கள் பயன்படுவதுபோல் கடவுளைக் காண்பதற்கும் பலவகை மார்க்கங்களும், சாதனங்களும் ஏற்பட்டிருக்கின்றன என்றும் கூறலாம். ஆகாயத்திலிருந்து விழுகிற மழைநீர் எவ்விதமாகச் சமுத்திரத்தை யடைகிறதோ அவ்விதமே எந்த தெய்வத்தை எந்த மதத்திலிருந்து வணங்கினும் கடைசியில் எல்லாம் பரமாத்மாவான கேசவனையே அடைகிறது. நம்மாழ்வாரும்,

"நும்மின் கவிகொண்டு நும்நும் இட்ட தெய்வமேத்தினால்
செம்மின் சுடர் முடி என் திருமாலுக்குச் சேருமே."

என்று திருவாய் மலர்ந்தருளினார். அவ் வுருவங்களுள் ஒன்றை மாத்திரம் கண்டவன் அதுதான் கடவுளின் உருவம் என்று உணர்கிறான். ஆனால் அவரது அநந்தகோடி லீலா விபூதிகளையும் கண்டு களித்த ஞானி ஒருவனே இவ் வநந்தகோடி ரூபங்களெல்லாம் அவ் வாநந்த மூர்த்தியின் விபூதிகள் என்று கூறமுடியும். கடவுள் சகுணமாயும் நிர்க்குணமாயும் விளங்குகின்றார். அவற்றை முற்றும் கண்டவர் ஒருவருமில்லை. அவர் இன்னும் எத்தகையர் என்பதைச் சொல்ல அவரால்தான் ஆகும்.

அப்படியானால் இரண்டுவிதக் கடவுள் உண்டோ? இதுவல்ல அதுவல்ல என்று ஒவ்வொன்றையும் பரிசோதித்துப்பார்த்துக் கடைசியில் சச்சிதாநந்த ஸ்வரூபமாயிருக்கிறவனே பகவான் என்று கண்டு பிடிக்கும் தத்துவஞ்ஞனுக்கும், இதுவரை சொன்னபடி பிரம்மசுரூபி என்று கண்டு பகவானைக்கொண்டாடும் பக்தனுக்கும் இரண்டுவித ஸ்வாமிகள் உண்டா? எவன் சச்சிதாநந்தமாக இருக்கிறானே அவனே பக்தனுக்கும் பகவான். ஸகுணப்பிரம்மமும் அவனே. நிர்க்குணப் பிரமமும் அவனே. இரண்டும் ஒன்றே. பக்தனால் பூஜிக்கப்பட்ட கடவுள்வேறு பிரம்மம்வேறு என்று எப்போதும் எண்ணமலிருக்கவேண்டும். ஒன்றாகி எங்கும் வியாபகமாயிருக்கிற பிரம்மத்தை நெஞ்சில் நினைத்துத் தியானிக்கமுடியாத அவ்வளவு சூக்ஷ்மமாயிருக்கிற காரணத்தை முன்னிட்டே பக்தன் எல்லாவற்றிற்கும் முதற்காரணமான ஈசுவரனைப் பிரமத்தில்நின்றும் சகுணமாக உபர்சிக்கிறான். அதாவது சகுணபிரம்மமாகத் தியானிக்கிறான். ஏனென்றால்:—பிரமம் களிமண்ணாகவும் அதிலிருந்து கணக்கில்லாத நானாவித வஸ்துக்கள் செய்யப்பட்டதாகவும் இருக்கிறது. களிமண் விஷயத்தில் அவையெல்லாம் ஒன்றே. ஆனால் உருவம் அல்லது தோற்றம் அவைகளுக்கு ரூபத்தை உண்டுபண்ணுகிறது அப்படிப்பட்டவஸ்துக்களாக அவைகள் செய்யப்படுவதற்குமுன்னமே அவையெல்லாம் களிமண்ணில் சூக்ஷ்மமாக அடங்கியிருந்தன. பதார்த்தத்தால் அவைகள் எல்லாம ஒன்றே என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவைகளுக்கு ரூபம் உண்டாகும்போதே அந்தரூபம் உள்ளபரியந்தம் அவைகள் நானா பேதமுள்ள வெவ்வேறாக இருக்கின்றன. களிமண்ணாகிய எலியானது களிமண்யானையாக ஒருபோதும் ஆகமாட்டாது. ஏனெனில் களிமண்ணை வைத்துப்பார்க்கும்பொழுது அவைகள் ஒன்றாயிருந்தாலும் பிரத்தியக்ஷ வெளித்தோற்றத்தில் ரூபம் அவைகளை உள்ளபடி வித்தியாசமாகக் காட்டுகிறது. அதுபோல் ஈசுவரனே தனிவஸ்துவாயுள்ள தத்துவப்பொருளின் பிரத்தியக்ஷரூபம். அல்லது வேறுவிதமாகச் சொல்லுவோமானால் பார்க்கக்கூடியரூபம் ஈசுவர ரூபமேதான். இப் பிரபஞ்சசிருஷ்டியும் நித்தியமாயுண்டு ஈசுவரனும் நித்தியமாகவிருக்கிறான்.

ஜீவாத்மா பரமாத்மா என்று இருவரும் நித்தியர்களாயிருக்க இருவர்க்கும் உள்ள வேற்றுமை என்ன என்பதைப்பற்றி ஆராய் வோம். வேதாந்த சூத்திரங்களின் நான்காவது அத்தியாயத்தில் நான்காவது பாதத்தில் மோக்ஷத்தை அடைந்தபிறகு பந்தத்தில்நின் றும் விடுபட்ட ஜீவாத்மாவுக்கு வரக்கூடிய பெரும்பான்மையான அநந்தமான சக்தியையும், ஞானத்தையும்பற்றிச் சொல்லியபிறகு சிருஷ்டிஸ்திதி ஸம்ஹாரமாகிற முத்தொழில்களைச் செய்யக்கூடிய சக்தி பகவானுக்கே யிருப்பதைத்தவிர வேறு எவரும் மோக்ஷத்தை யடைந்தவர்களாக விருந்தாலும், அப்படிப்பட்ட சக்தியை யடையார் என்று ஒரு சூத்திரத்தில் வியாசபகவான் எடுத்துச்சொல்லுகிறார். துவைதமத பாஷியகாரர்களுக்கு மேற்படி சூத்திரத்திற்கு வியாக்கி யானம் செய்வதில் பரமாத்மாவான பகவானுக்குள்ள அநந்த சக்தி யும் பூரணமான சுயேச்சை நிலைமையும் கீழ்ப்பட்ட ஜீவாத்மாவுக்குக் கிடைப்பது எப்பொழுதும் அசாத்தியமென்று காண்பிக்க எளிதா யிற்று. துவைதத்தில் பூரண பாண்டித்தியமுள்ள மத்வாசாரியார் வராஹ புராணத்திலிருந்து ஒரு சுலோகத்தை உதகரித்து இதைப் பற்றித் தன் அபிப்பிராயத்தைச் சுருக்கமாக எழுதுகிறார்.

(தொடரும்.)

**வி. தி. ஸ்ரீநிவாச ஐயங்கார்,**

தமிழ்ப்பண்டிதர்.

---

உ

## பிழைதிருத்தம்.

—:o:—

சென்ற கார்த்திகைமாதச் செந்தமிழில் ௩௦-ஆம் பக்கம் ௧௩-ஆம் வரியில் "கடையே கடையிணை, பின்கடைக், கூழை யிடைப்புணர்வு" "என்றிருப்பதை கடையே கடையிணை பின் கடைக்கூழை இடைப் புணர்வு" எனப் பிரித்துக்கொள்க.

பத்திராதிபர்,

# புத்தக வரவு.

(1) திருமந்திரம்:—இது சிவயோகசித்தியடைந்து சிறந்த திருமூலதேவராற் செய்யப்பட்ட, சிவாகமசாரப்பொருள்களை யுபதேசிக்கும் 3000-செய்யுள்களை யுடையதாய்ச் சைவத் திருமுறைகளுட் பத்தாந்திருமுறையாகவைத்துப் போற்றும் பெருமைவாய்ந்ததென்பது யாவரு முணர்ந்ததே. யாப்பருங்கலவிருத்தியுள் மிக்குவரும் ஆரிடப்போலிக்கு உதாரணமாக இந்நூற்செய்யுள் காட்டப்பட்டமையாற் பிறராலும் இது ஆரிடநூல்லியமாக மதிக்கப்பட்டதென்பதும் நன்கு விளங்கும். இவ்வருமை வாய்ந்த தமிழ்மறையானது முன்னரே யச்சிடப்பட்டிருப்பினும் அது சுத்தபாடமின்றி யிருப்பது கண்டு சிவபுண்ணியச் செல்வரான தேவிகோட்டை ஸ்ரீமாந் மெ. அரு நா. இராமநாதஞ் செட்டியார், ஸ்ரீமாந்-மெ. அரு. அரு. அருணசலஞ் செட்டியார் இவர்கள் விருப்பத்தையும் பொருளுதவியையும் கொண்டு ஸ்ரீலஸ்ரீ சபாபதி நாவலரவர்கள் மாணாக்கர் மாவை ஸ்ரீமத்-விசுவநாதபிள்ளை அவர்களாற் றத்துவவிசார சீலரான சில பண்டிதர்கள் முன்னிலையிற் பலபிரதிகளை வைத்துப் பரிசோதித்துத் திருத்தப்பட்ட மூலத்துடன் வேண்டும் இடங்களுக்கேற்ற சில குறிப்புரையு மெழுதி நன்கு பதிப்பிக்கப்பட்டு ப்ருஹ்மஸ்ரீ திவான்பஹதூர் ஸர் எஸ். சுப்பிரமணிய ஐயரவர்களுக்கு அர்ப்பணம் செய்யப்பெற்றிருக்கிறது. இதில், மஹாமஹோபாத்தியாய பிருஹ்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்களாலும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதபண்டிதரவர்களாலும் கொடுக்கப்பட்ட சிறப்புப்பாயிரங்களும் வேதாரணியம் பிருஹ்மஸ்ரீ-வை. வே. இரமணசாஸ்திரிகளால் எழுதப்பட்ட நூன்முகமும் மற்றும் பதிப்புரை முதலியனவும் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் விலை ரூ 3—8—0.

(2) வல்லீபரிணயம்:—இது கடலூர் ஸ்ரீமத்-ந. பலராமையரவர்களா லியற்றப்பட்ட ஒரு புதிய தமிழ் நாடகம். இதில் குமாரக் கடவுள் வள்ளிநாயகியை மணம்புரிந்த சரித்திரத்தைக்கொண்டு பாத்திரங்களுக்கேற்ற நடையுடன் இடையிடையே சில கீர்த்தனமுதலிய பாடல்களுமுடையதா யியற்றப்பெற்றிருக்கிறது. விலை விவரம் வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதித் தெரிந்துகொள்க.

☞ மேற்கண்டபுத்தகங்கள் 2-ம் பாண்டியன் புத்தகசாலையில் வழக்கப்படி சேர்க்கப்பட்டன.

ப—ர்.

வேளிர் வரலாறு:—இப் பெயர்பெற்ற வியாசமொன்று, செந்தமிழில் அதன் பழைய பத்திராதிபரான ஸ்ரீ. மு. இராகவையங்கார் அவர்களால் வெளியிடப்பட்ட விஷயம் பலர்க்குத் தெரிந்திருக்கலாம். இவ் வாராய்ச்சி, 1905-ம் வருஷத்து மதுரைத் தமிழ்ச்சங்கக் கூட்டத்தில், காலஞ்சென்ற வி. கனகசபைப்பிள்ளையவர்களது அக்கிராசனத்தின்கீழ்க் கூடிய மஹாசபையில் வாசிக்கப்பட்டது. இஃது, அப்போதே அறிஞர் பலருடைய நன்குமதிப்பைப் பெற்றதோடு, ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு ராயல் ஏஷியாடிக் ஸொஸைட்டி பத்திரிகையில் வெளியிடப்பெற்றும் பாராட்டப்பட்டது. தமிழ்நாட்டில் பண்டைக்காலத்தே விளங்கிய வேளிர் என்ற கூட்டத்தாரின் குலம் குடி காலம் தேசம் பெருமை முதலியவற்றைச் சங்கச் செய்யுள்களையும் பிற சரித்திர நூல்களையுந் துணைக்கொண்டு, தக்கபடி ஆராய்ச்சிசெய்து இனிய நடையில் எழுதப்பட்டது. இத்தகைய வியாசத்தை, சென்னைச் சர்வகலா சங்கத்தாரும் 1914-ம் வருஷத்து இண்டெர் மீடியட் பரீக்ஷாபாடமாக நியமித்திருத்தலாலும் இதன் பெருமை யாவருக்கும் விளங்கும். இதனை, ஐயங்காரவர்கள் மறுமுறை சோதித்துப் பல கீழ்க்குறிப்புகளிட்டும், அவ் வேளிர் குலத்தலைவரான, ஆய், எவ்வி, ஆவி, பாரி, பேகன், நன்னன் முதலிய பழைய தமிழ் வள்ளல்கள் சரித்திரங்களை எழுதிச்சேர்த்தும் ஒரு சிறு புத்தகமாக இப்போது வெளியிட்டிருக்கின்றனர். இவ் வாராய்ச்சிகளெல்லாம் படிப்பவர்க்கு ஆனந்தத்தை அளிக்கவல்லன என்பதில் ஐயமில்லை. "மிக்வும் கடினமாகிய சங்கச் செய்யுளிற் புகுந்து ஆராய்ந்து விஷயங்களை ஒழுங்காக எழுதுவதைக் காட்டிலும் சிறந்த அருமை வேறு யாதுளது? இங்ஙனம், ராயல் ஏஷியாடிக் ஸொஸைடியாராலும், சர்வகலா சங்கத்தாராலும் மற்றும்பல தக்க பண்டிதர்களாலும் கொண்டாடப்பெற்ற இந் நூலைப்பற்றி அதிகமாக இங்கு எழுதல் மிகையென்றே எண்ணுகிறேன். இதன் விலை அணு 8. வேண்டியோர், "மு. இராகவையங்கார், c/o. செந்தமிழ்ப் பத்திராதிபர்," தமிழ்ச்சங்கம், மதுரை. என்ற விலாசத்துக்கேனும், தமிழ்ச்சங்க மானேஜர் அவர்கட்கேனும் எழுதிக்கொள்க.

பத்திராதிபர்,

**திரு. நாராயணையங்கார்.**